புகழ்ச்சிக் கூட்ட நற்செய்தி

2019 ஆவணி மாதம் 05ம் திகதி தொடக்கம் ஆவணி 11ம் திகதி வரை

## *பழக்கப்பட்ட பயணத்தை நிறுத்தி திரும்பு*

01. ஆரம்பப் புகழ்ச்சி புபுது பாடல் இல 03 ஆ வந்திடுவீர்…..

02. புகழ்ச்சிக்கான அறிமுகம் உரோமர் 8:26

இவ்வாறு தூயஆவியார் தமது வலுவற்ற நிலையில் தமக்கு துணை நிற்கின்றார். ஏனெனில் எதற்காக எவ்வாறு நாம் இறைவனிடம் வேண்டுவது என்று நமக்குத் தெரியாது. தூய ஆவியார் தாமே சொல் வடிவம் பெற முடியாத நம்முடைய பெருமூச்சுகளின் வாயிலாய் நமக்காக பரிந்து பேசுகிறார்.
எமது வலுவற்ற நிலையில் எமக்கு அன்பு செய்தவாறு எமக்குத் துணையாக எம்முள் வீற்றிருக்கும் தூயஆவியானவருக்கு இடமளித்தவாறு இன்றைய புகழ்ச்சிக்கு உள்ளாகுவோம். எமது பலவீனத்தை பாவமாகக் கருதாமல் எம்மை அன்பு செய்யுமளவு நிபந்தனையின்றி எமக்கு அன்பு செய்யும் மன்னிக்கும் மகோன்னத இறைவனைப் புகழ்வோம். கண்ணீர், பெருமூச்சு அநாதரவு வேதனை அனைத்தினுள்ளும் தனிமையான நீங்கள் நான் எங்களுக்காக இறைவனின் முன்னிலையில் மீண்டும் தூயஆவியானவரோடு இணைந்து அவரைப் புகழ்வோம்.
புபுது பாடல் இல 19 “எமக்குயிர் தரும் ……

03. நாளுக்குரிய நற்செய்தி திருவெளிப்பாடு 3:15, 16,19
“உன் செயல்களை நான் அறிவேன் நீ குளிர்ச்சியாகவும் இல்லை சூடாகவும் இல்லை. குளிர்ச்சியாகவோ சூடாகவோ இருந்திருந்தால் எத்துணை நலமாய் இருந்திருக்கும். இவ்வாறு நீ குளிர்ச்சியாகவோ சூடாகவோ இல்லாமல் வெதுவெதுப்பாய் இருப்பதால் என் வாயிலிருந்து என்னைக் கக்கி விடுவேன். நான் யார் மீது அன்பு செலுத்துகிறேனோ அவர்களைக் கடிந்து கண்டித்து திருத்துவேன். ஆகவே நீ ஆர்வம் கொண்டு மனம் மாறு”

04. கலந்துரையாடலுக்காக

- மேலே காணப்படும் பரிசுத்த வேதாகம வார்த்தைப் பகுதிகள் இரண்டிலும் கிறிஸ்தவனிடம் இருக்க வேண்டிய வாழ்வின் நடைமுறை குறித்து எமது அவதானத்தை உள்ளாக்குகின்றார்கள். இறைஅரசை வெளிப்படுத்தும் தூதுப்பணிக்கு அழைக்கப்பட்டுள்ள உங்களிலும் ஃஎன்னிலும் இறைவன் எதிர்பார்க்கின்ற வாழ்வில் சாட்சி குறித்த அனுபவங்களை அருகிலிருப்பவருடன் பகிர்ந்து கொள்ளவும்.
- இறைஅரசை வெளிப்படுத்தும் தூதுப்பணியில் ஈடுபட்டுள்ள அனைவரிடமும் இறைவன் எதிர்பார்க்கின்ற வாழ்வின் நடைமுறையானது வாடிப்போன உயிரற்ற பின்னடைவு கொண்ட நொந்து நூலாகிய நிலைமை அல்ல. உற்சாகமான நிறைவான சக்தியுள்ள தைரியமான வாழ்வின் நிலைப்பாடாகும்.
- இறைஅரசினை தன் வாழ்வின் முழு நோக்கமாக்கிக் கொண்ட இயேசு ஆண்டவர் வழி செல்ல அழைப்பினைப் பெற்றுள்ள சீடத்துவ சங்கம் அவர்களைப் பின்தொடரும் கிறிஸ்தவ சங்கங்கள் எல்லாம் அந்த வாழ்வின் வழிமுறையில் வாழ்வது இறைவிருப்பமாகும். அதன் காரணமாகவே ஆண்டவர் வெளிப்படுத்தும் வார்த்தைகள் எமக்கு சவாலாக இருப்பதில்லையா? “நீ குளிர்ச்சியாகவோ சூடாகவோ இல்லாமல் வெதுவெதுப்பாக இருப்பதால் என் வாயிலிருந்து உன்னைக் கக்கி விடுவேன்”

- இறைவனை அன்பு செய்கின்ற அனைவருக்கும் எல்லா வேலையிலும் கடிந்து கண்டித்து அவர்களை திருத்துகின்ற ஆண்டவர் இறைஅரசினை வெளிப்படுத்துவதாயின் மனம் வருந்தி மனந்திரும்பிட வேண்டும். என நினைவு படுத்துகின்றார். திருந்துவதில் ஏற்படும் அமைதி தெளிவு என்பன உற்சாகமாக இறைஅசினை வெளிப்படுத்திட எமக்கு தேவையான பலத்தை தரும்.

05. எம்பேரில் ….

- நாம் எம்மை திரும்பிப் பர்ப்போம் நீங்கள் நான் இருப்பது சூடாகவோ? குளிர்ச்சியாகவோ? இல்லாவிடில் சூடாகவோ குளிர்ச்சியாகவோ இல்லாமல் இறைவன் எம்மைக் கக்கி விடும் நிலையிலா?
- இறைவனாம் திருந்திய பயணத்திற்கு உள்ளாவதற்கு மனம் வருந்தி மனம் திரும்பிய ஒருவனாகி உற்சாகத்துடன் இறை அரசினைப் பரப்பிட ஆயத்தமாவோம்.

06. இறுதிப் புகழ்ச்சி

புபுது பாடல் இல 291 “திரும்புங்கள் ……”
பொருத்தமான பாடலைப் பாடவும்.